| | | | |
|---|---|---|---|
| Headline | Compulsory drug detention centers ‘have no role’ in treatment of opioid addiction, | | |
| MediaTitle | Tamil Nesan (Sunday) | | |
| Date | 11 Dec 2016 | Color | Black/white |
| Section | News | Circulation | 55,000 |
| Page No | 4 | Readership | 210,000 |
| Language | Tamil | ArticleSize | 251 cm² |
| Journalist | NULL | AdValue | RM 730 |
| Frequency | Daily | PR Value | RM 2,191 |



# போதைப்பித்தர் மறுவாழ்வு மையங்களை மூடி விடுங்கள்

*கோலாலம்பூர், டிச.11-*
இப்போது போதைப்பித்தர் மறுவாழ்வு மையங்களில் பாதிக்கப்பட்டவர்களே திரும்பத் திரும்ப வந்து மிகவும் உயர்ந்த எண்ணிக்கை பதிவுச் செய்யப்படுவது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதால் அவற்றை மூடி விடுவதுதான் சிறந்தது என மலாயாப் பல்கலைக்கழகத்தின் (யூஎம்) மருத்துவப் பிரிவுக்கானத் தலைவர் பேராசிரியர் டத்தோ டாக்டர் அடிபா கமாருல்ஸாமான் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்கள் இணைந்து மேற்கொண்ட ஓர் ஆய்வில் தன்னார்வ மையங்களில் போதைப்பித்தர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கையை மேற்கொள்வது மிகவும் சிறப்பாக இருப்பது தெரிய வந்துள்ளது. இவர்கள் பொதுவாக தன்னார்வ மையங்களில் 352 நாட்கள் தங்கியிருப்பதைக் காட்டிலும் மறுவாழ்வு மையங்களில் 31 நாட்களுக்குத் தங்கியிருந்து பிறகு மீண்டும் அதே பழக்கத்திற்குத் அடிமையாகி விடுவதாக 'The Lancet Global Health' என்ற தலைப்பிலான ஒரு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இதில் மறுவாழ்வு மையங்களைக் கொண்டிருக்கும் நாடுகள் போதைப்பித்தர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிப்பதில் எந்தப் பயனுமில்லை என்பதால் அனைத்து நாடுகளும் அவற்றின் மறுவாழ்வு மையங்களை மூடி விடுவதுதான் சிறந்தது என ஓர் அறிக்கையில் உலக சுகாதார நிறுவனத்தின் எச்ஐவிக்கான தொழில்நுட்ப வியூக ஆலோசகர் செயற்குழுத் தலைவரும் மலேசிய எய்ட்ஸ் மன்றத்தின் தலைவருமான டாக்டர் அடிபா குறிப்பிட்டார். முன்னதாக நாட்டில் தேசிய போதைப்பொருள் துடைத்தொழிப்பு நிறுவனத்தை போதைப்பித்தர் மறு




வாழ்வு மையம் கடந்த 2010 நிறுவியது. இதனிடையே, அனைத்து நாடுகளும் 'மெத்தாடொன்' (Methadone) சிகிச்சை முறையைத் தன்னார்வ முறையில் மேற்கொள்ள சமூகத்தினரை ஊக்குவிக்க வேண்டியது அவசியமாகும். அண்மையில் சில ஆண்டு காலமாக போதைப் பித்தர்களுக்கு சிகிச்சையளிப்பதில் முறையாகப் பலனளிக்காததோடு மனித உரிமை மீறல்களும் நிகழ்வதாக மலேசியா மட்டுமின்றி ஆசியாவின் அனைத்து போதைப்பித்தர் மறுவாழ்வு மையங்கள் தொடர்பில் கேள்வி எழுந்துள்ளது.

இதில் மெத்தாடொன் சிகிச்சையைப் பெற்றவர்களைக் காட்டிலும் அதை மேற்கொள்ளாதவர்கள் தான் திரும்பத் திரும்ப மறுவாழ்வு மையங்களுக்கு வந்து கொண்டு இருக்கின்றனர். மறுவாழ்வு மையங்களில் போதைப்பித்தர்களின் எண்ணிக்கைத் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருப்பது இந்த ஆய்வில் மலேசியா மட்டுமின்றி ஆசியாவின் கொள்கைக்கும் எதிர்மாறான விளைவை ஏற்படுத்தியுள்ளதைக் காட்டுவதாக டாக்டர் அடிபா மேலும் கூறினார்.

Powered by: isentia